## உகுவெல பிரதேச சபை

## மாத்தளை மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜுலை 25 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஜுலை 08 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 12 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உகுவெல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------

1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

-------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு கொள்கைகள்

-------------------------------------

களஞ்சிய முற்பணக் கணக்கு முறைமை கடைபிடித்திருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(அ) கூட்டுத்தொகை ரூபா 137,558 இற்கான செலவுக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 4,348,549 இற்கான நிர்மாண வேலை கடன் கொடுத்தோர்களுக்காக ஏற்பாடுகள்

மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், கூட்டுத்தொகை ரூபா 1,090,485 இற்கான கடன்பட்டோர் மீதிகளை கணக்குகளுக்கு எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2013.12.31 திகதியில் உள்ளவாறு உகுவெல மக்கள் வங்கியில் காணப்படும் ரூபா 2,261,745 இற்கான நிலையான வைப்புக்கள் மீதி கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது கட்டடங்கள் நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தலுக்காக 11 சந்தர்ப்பங்களில் செலுத்தியிருந்த ரூபா 2,051,561 மற்றும் பொது சந்தை நிர்மாண வேலையின் இரண்டாம் கட்டத்திற்கான பெறுமதி கூட்டியவரி ஆக ரூபா 289,029 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) திப்புறுவெல பொது மயானம் அமைந்துள்ள 30 பர்சஸ் காணியின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. பிலிஸரு செயற்திட்டத்தின் கீழ் முன்னைய ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த கிரயம் ரூபா 1,618,312 இற்கான கட்டடத்தின் பெறுமதியை மீண்டும் ஒருமுறை மீளாய்வாண்டின் போதும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) 03 நிலையான சொத்துக்கள் கணக்குகளை சேர்ந்த 10 விடயங்களின் பெறுமதியாகிய ரூபா 354,055 தொகை அக்கணக்குகள் தவிர பலவின களஞ்சிய தொக்குக் கணக்கிலும் உட்படுத்தப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 366,111 இற்கான மருந்துவகை இருப்பு மற்றும் ரூபா 117,853 இற்கான பொருட் பதிவேட்டுப் பண்டங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன், நூலகப் புத்தக மீதி ரூபா 14,253 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது,

1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------

கூட்டுத்தொகை ரூபா 39,483,822 இற்கான 02 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்படும் மீதிகளிடையே, அவதானிக்கப்பட்ட சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 15,729,182 ஆகும்.

1.3.5 பெறவேண்ய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெற வேண்டிய கணக்குகள்

-----------------------------------------

2013 திசெம்பர் 31 திகதிய 04 பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,430,068 ஆக காணப்பட்டதுடன் அதில் 05 வருடங்களை விட கூடுதலான மிகைத்துள்ள ரூபா 142,180 மீதியும் அடங்கியிருந்தது.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதிகளில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 02 கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,569,965 ஆக காணப்பட்டதுடன்,

அதில் ஒரு வருட காலத்தை விஞ்சிய ரூபா 1,988,487 இற்கான மீதியும் அடங்கியிருந்தது.

1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 461,940 இற்கான மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.7 சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைகள்

-------------------------------------------------------------------------------------------------------------------------------------

கீழ் விவரிக்கப்பட்டுள்ள இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரவு 132 (ஓ) மற்றும் (ஔ) | குறிப்பிட்ட ஏற்பாடுகளுடன் இணக்கமின்றி ஏற்படுத்தியுள்ள வரையறைகளை மிகைத்து 04 சந்தர்ப்பங்களில் ரூபா 31,440 தொகை ஒன்று செலவிடப்பட்டுள்ளது. |
| (ஆ) 1988 இன் பிரதேச (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவை விதி 99 | ரூபா 463,867 இற்கான சான்றுபடுத்தப்படாத 16 உறுதிச் சான்றுகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |
| (இ) 1990 அக்டோபர் 10 திகதி இலக்கம் 41/90 பொது நிருவாகச் சுற்றுநிருபம் | பிரதேச சபைக்கு சொந்தமான 05 வாகனங்களின் எரிபொருள் எரிவு பற்றி பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை. |
| (ஈ) 2013 ஏப்ரல் 05 திகதிய இலக்கம் 01/2013 கொண்ட மத்தய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றுநிருபம் | நாளாந்த ஓட்ட அட்டவனைகள் சமர்பிக்கப்படாத உப தலைவருக்கு மற்றும் 12 மந்திரிமார்களுக்கு ரூபா 185,000 எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்தது. |

2 நிதி மீளாய்வு

--------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,436,943 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரோப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 20,201,653 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 3,764,710 இற்கான வீழ்ச்சி ஒன்றினை காட்டுகின்றது.

2.2 வருமான நிருவாகம்

----------------------------

2.2.1 வீதவரியும் ஏக்கர்வரியும்

----------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மற்றும் ஏக்கர்வரி மீதி முறையே ரூபா 817,626 உம் மற்றும் ரூபா 31,431 உம் காணப்பட்டதுடன், அம் மீதிகளுக்கு 05 வருட காலத்தை விஞ்சிய முறையே ரூபா 110,945 இற்கான மற்றும் ரூபா 31,235 இற்கான மீதிகள் அடங்கியுள்ளன.

2.2.2 நீர் கட்டணம்

-------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை நீர் கட்டண கணக்கில் மீதி ரூபா 1,310,485 ஆகும்.

2.2.3 வாடகை

------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வாடகை கணக்கின் மீதி ரூபா 251,965 ஆகும்.

2.2.4 நீதி மன்றத் தண்டம் மற்றும் முத்திரை கட்டணம்

---------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 1,364,434 தொகையும் மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 8,821,264 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.3 மிகை விதிப்பு

-------------------

பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டு ஒன்றின் போது விதிக்கப்பட்ட மிகை விதிப்புகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 86,970 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

3.1 செயற்பாட்டு திறமையின்மை

-----------------------------------------

பினவரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1978 இன் 41 இலக்கம் கொண்டு நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் பிரிவு 21 இன் பிரகாரம், கட்டடங்களின் வரைபுகள் அங்கீகரிப்பதற்காக மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய மூன்று ஆண்டுகளின் போது கிடைத்திருந்த 1305

விண்ணப்பங்களில் 953 அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 121 விண்ணப்பங்களுக்கு மாத்திரம் இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) பண்டங்கள் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் ரூபா 46,450 கிரயத்தை உடைய பொருட் பதிவேட்டு பண்டங்கள் 41 அலகுகளின் பற்றாக்குறையும் மற்றும் ரூபா 15,365 இற்கான ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்ய வேண்டிய 65 வகையான பண்டங்கள் இனங் கண்டிருந்த போதும், அது தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டிய 386 வர்ததக நிலையங்கள் இனங்கண்டு அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருந்த போதும் அவற்றில் 277 வர்த்தக நிலையங்களுக்கு மாத்திரமே அனுமதி பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. மீதியான 109 வர்த்தக நிலையங்களும் அனுமதிப் பத்திரம் பெறாமல் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

3.2 கருத்து முரண்பாட்டு தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடைகள் வாடகைக்கு கொடுத்தல்

i. உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் 1980/46 கொண்ட 1980 திசெம்பர் 31 திகதிய சுற்றுநிருபத்தின் பந்திகள் 01 மற்றும 03 இற்கு இணக்கமின்றி பழைய சந்தையின் கடைகளுக்கு முன்னர் இண்ங்கியிருந்த ரூபா 750 இற்கான உடன்பட்ட பெறுமதிக்கு வாடகையாளர் 10 பேருக்கு புதிய சந்தையின் கடைகள் சாட்டப்ப்ட்டிருந்தன.

ii. மேற்கூறிய சுற்றுநிருபத்தின் பந்தி 07 இன் பிரகாரம், உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறியதற்காக உடன்படிக்கையை இரத்து செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும், 4 கடைகளை இடை வாடகை கொடுக்கப்பட்டிருந்த வாடகையாளர்களில் வாடகை ஒப்பந்தத்தை இரத்து செய்வதற்கு அல்லது வேறு பொருத்தமான செயற்பாடு ஒன்றினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமில்லாத இரண்டு காணிகளில் ரூபா 272,337 தொகை செலவிடப்பட்டு நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

3.3 பயன்படுத்தப்படாத / குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

------------------------------------------------------------------------------------

2010 ஆண்டு முதல் பொது சந்தை தொடர் கட்டடத்தில் 06 கடைகள் மூடப்பட்ட நிலையில் காணப்பட்டதுடன், 2010 நவம்பர் மாதம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் இருந்து நன்கொடை ஒன்றாக சபைக்குக் கிடைத்திருந்த புகை பிடிக்கும் இயந்திரத்தை பயன்படுத்தாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

3.4 ஒப்பந்த நிருவாகம்

---------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | ஏற்பாடுகள் | நிர்மாண வேலைகளின் பெயர் | செலவிடப்பட்ட தொகை | பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட திகதி | | குறைபாடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | --------------- | ------------------ | ------------------ | ---------------------- | | --------------------- |
| | | | | ரூபா. | | | |
| (அ) | i. | பொதுநிதி | போதிராஜ மாவத்தையின் கடைசிப் பகுதி கொங்கிரீட் போட்டு அபிவிருத்தி செய்தல் | 65,448 | 2013.11.19 | (i) | பாதையின் சில இடங்களை உடைத்து பரிசோதனை மேற்கொண்ட போது கொங்கிரீட் கலவை மிகவும் பலவீன நிலமையில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. |
| | | | | | | (ii) | கொங்கிரீட் கலவைக்கு 1 ½ “ கற்கள் போடப்பட வேண்டும் எனினும் 2” அல்லது மிகையான கற்கள் போடப்பட்டிருந்தன. |
| | ii. | மேற்படி | தாலிங்காமட வடகொட 16 மைல்கள் வரை பாதையை அபிவிருத்தி செய்தல் | 184,989 | 2014.10.28 | (i) | புாதையின் இரண்டு இடங்களில் உடைத்து பரிசோதித்த போது கொங்கிரீட்ட கலவை உரிய நியமத்தில் காணப்படவில்லை. . |
| | iii. | மேற்படி | ரத்வத்த கீழ்ப் பகுதியில் முன்பள்ளிக் கட்டடம் நிர்மாணித்தல் | 223,105 | 2014.10.28 | (i) | கட்டடத்தில் ரத்வத்த ஸ்ரீ முத்துமாரிப்படன் கோயில் பூசாரி தனது குடுப்ப அங்கத்தவர்களுடன் குடியிருந்துள்ளார். அங்கு முன்பள்ளி ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | | | | | (ii) | பயன்படுத்தப்பட்டுள்ள பழைய 6 அஸ்பெஸ்ரோஸ் தகடுகள் கூரைக்கு போடப்பட்டிருந்தன. |
| | | | | | | (iii) | நீர்மாண வேலை மேற்கொள்ளப்பட்டுள்ள காணி சபைக்கு உரித்தாக்கப் பட்டிருக்கவில்லை. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (ஆ) | i. | மகநெகும | ஆனந்த குடியேற்ற பாதை கொங்கிரீட் அச்சு கல் பதித்து அபிவிருத்தி செய்தல் | 500,000 | 2014.10.28 | (i) | 94.5 மீற்றர் நீளத்திற்கு அச்சு கற்கள் பதிப்பதற்காக கொடுப்பனவு மேற்கொண்டிருந்த போதும் 92.0 மீற்றர் மாத்திரம் அச்சுக் கற்கள் பதியப்பட்டிருந்தமையால் 2.5 மீற்றர்களுக்கு ரூபா 11,306 மிகையாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |
| | | | | | | (ii) | சில இடங்களில் நியமங்களுக்கு ஏற்ப கற்கள் பரப்பி இருக்கவில்லை. |
| | ii. | மேற்படி | தாலிங்காமட வட்டகொட பாதை அச்சு கற்கள் பதித்து அபிவிருத்தி செய்தல் | 500,000 | 2014.10.28 | | 93.30 மீற்றர் நிலத்திற்கு அச்சுக் கற்கள் பதிப்பதற்காக கொடுப்பனவு மேற்கொண்டிருந்த போதும் 92.20 மீற்றர்கள் மாத்திரம் அச்சு கற்கள் பதிவு செய்திருந்தமையால் 1.1 மீற்றர்களுக்காக ரூபா 4,642 மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. |

3.5 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

-----------------------------------------------------------------

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரமாகும் சுமார் 03 மெற்றிக்தொன் திண்ம கழிவுப் பொருட்களில் தெரிவு செய்யப்பட்ட திண்மக் கழிவுப் பொருட்கள் 1 – 1 ½ தொன்கள் இடைப்பட்ட எண்ணிக்கை தெமடகொள்ள கழிவுப் பொருட்கள் மீள்சுழற்சி நிலையத்திற்கு ஒப்படைத்ததுடன் மீதியாகவுள்ள கழவுப் பொருட்களை சுற்றாடல் மாசடையும் விதமாக உருவெல மற்றும் எலகடுவ பிரதேசத்தில் அமைந்துள்ள சபைக்கு சொந்தமான இரண்டு காணிகளில் போடப்படுகின்றன என அவதானிக்கப்பட்டன.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

----------------------------------------------------------------------

4.1 பாதீட்டு கட்டுப்பாடு

----------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் 18 செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 780,000 ஏற்பாடுகளில் செலவுகள் ஒன்றும் மேற்கொள்ளப்படாமல் வேறு செலவு விடயங்களுக்கு மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் அல்லது சேமிக்கப்பட்டு காணப்பட்டது. அத்துடன் இன்னும் 50 செலவு விடயங்களில் தொடர்பாக தேறிய ஏற்பாடுகள் மற்றும் செலவுகள் இடையே நூற்றிற்கு 20 முதல் நூற்றிற்கு 99 வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் 30 வருமான விடயங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 8,627,500 வருமானத்தில் வருமானம் ஒன்றேனும் உழைத்திருக்கவில்லை, அத்துடன், மேலும் 13 வருமான விடயங்களில் மதிப்பீட்டு வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானம் இடையே நூற்றிற்கு 54 முதல் 92 இடையே வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டு கட்டுப்பாடு

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(இ) களஞ்சிய கட்டுப்பாடு

(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு

(உ) அகக் கட்டுப்பாடு

(ஊ) நிதி முகாமைத்துவம்